புதுமலர்: 22 இதழ்: 04 ஆடி - ஆவணி

# அனல்

01.07.2025

ஆசிரியர்:
போதகர் வே. மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்:
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -

# வேதனையைக் கொண்டு வரும் பயம்

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


01. அனலின் குரல்
02. கதையும் கற்றதும்
03. நற்செய்திப்பகுதி
04. சிறுவர் வட்டம்
05. குறுக்கெழுத்துப்போட்டி - 126
06. வாலிபர் வளாகம்
07. வினா விடை - 128
08. பெண்கள் பக்கம்
09. அருட்பணியாளர் சரிதை
10. அனலின் ஆன்மீக விருந்து
11. பக்தர்கள் பயிலகம்
12. படித்ததில் சில...
13. உன்னையும் ஆசீர்வதிப்பார்
14. தேவன் தந்த வைரங்கள்




## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய முகவரி:



சீயோன் ஜெபக்குழு,
இல 29, 29/1,
இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

### மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anel",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலின் குரல்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!.

இவ்வாண்டின் நடுப்பகுதி வரை நம்மை நடத்தி வந்த தேவனுக்கு மகிமை உண்டாகட்டும். மறுபடியுமாக இச் சஞ்சிகையூடாக உங்களைச் சந்திப்பதில் சந்தோசம்.

தயவான வேண்டுகோள்: 'ஒவ்வொரு சஞ்சிகையையும் முற்றுமாய் வாசித்து கிறிஸ்துவுக்குள் உறுதிப்படுங்கள். மற்றும் சஞ்சிகையைப் பற்றிய உங்கள் அபிப்பிராயங்களையும் எங்களுக்கு தெரியப்படுத்திக் கொள்ளுங்கள். நீண்ட நாட்களாக தொலைபேசி மூலமாகவோ, அல்லது கடிதம் மற்றும் மின்அஞ்சல் மூலமாகவோ யாரும் உங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கவில்லை. எனவே இனிவரும் காலங்களில் உங்கள் கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் உங்கள் ஜெப விண்ணப்பங்களையும் எமக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்துங்கள். உங்களுக்காக ஜெபிக்கப்படும். அத்துடன் மிக அவசியமான விண்ணப்பங்களை வாசகர்களுக்கு சஞ்சிகை மூலம் தெரியப்படுத்துவோம். எனவே இதனைக் கருத்திற் கொண்டு செயற்படும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் தேசங்களுக்காக ஜெபியுங்கள். தேவனுடைய சுவிசேஷத்தை அறிவிக்க பிரயாசப்படுங்கள். தேவனை அறிந்திருக்கிற ஒவ்வொரு தேவபிள்ளைகளும் உங்களைப் பாவத்தில் இருந்து காத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் பரிசுத்தம் இல்லாமல் ஒருவரும் இயேசுவைத் தரிசிக்க முடியாது. ஒருவருக்கொருவர் ஜெபம் பண்ணுங்கள்.


இந்தப் பூமியும், பெயரும், புகழும் எங்களுக்குச் சொந்தமில்லை. இதெல்லாம் நம்மைவிட்டுப் போய்விடும். நித்தியத்துக்கும் அழியாத உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக் கொள்ளுங்கள்.

தேவன் உங்களை ஆசீர்வதிக்கட்டும்.

- ஆசிரியர் -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதையும் கற்றதும்

## மற்றவர்களுக்கு உதவியாக வாழ்கின்றோமா?

❑ வை. விமலதாஸ்



கெவின் கார்ட்டர் என்பவர் ஒரு தென்னாபிரிக்க புகைப்பட பத்திரிகை யாளர். 1993 ஆம் ஆண்டு சூடானில் ஏற்பட்ட பஞ்சத்தை சித்தரிக்கும் வண்ண மாக அவரால் பதிவு செய்யப்பட்ட புகைப் படத்திற்காக 1994 ஆம் ஆண்டு உயர்விருதான 'புலிட்சர்' விருதைப் பெற்றார்.

அவர் தனது உயர்நிலை கல்விக்கு பிற்பாடு, மருந்தாளராக பணியாற்றினார். தொடர்ந்து இராணுவத்தில் சேர்க்கப்பட்டார். அவர் காலாட்படையில் இருந்து தப்பிக்க, விமானப்படையில் சேர்ந்தார், அதில் அவர் நான்கு ஆண்டுகள் பணியாற்றினார். அதனைத் தொடர்ந்து வானொலி நிலையத்தில் பணியாற்ற ஆரம்பித்தார். இருப்பினும், இது அவர் எதிர்பார்த்ததை விட மிகவும் கடினமாக இருந்தது. விரைவில், அவர் தனது சேவையான இராணுவ சேவையின் மீதமுள்ள பகுதியைச் செய்ய முடிவு செய்தார். 1983 ஆம் ஆண்டு பிரிட்டோரியாவில் தேவாலய தெரு குண்டுவெடிப்பைக் கண்ட பிற்பாடு அவர் ஒரு செய்தி புகைப்படக் கலைஞராகவும் பத்திரிகையாளராகவும் மாற்றம் பெற்றார்.

மார்ச் 1993இல் சூடானில் ஏற்பட்ட உள்நாட்டு கலவரங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் அதனால் ஏற்பட்ட பஞ்சத்தையும், பாதிப்பையும், பட்டினியாய் இருந்த மக்களையும் பதிவு செய்வதற்காக ஐ.நாவின் உதவியுடன் அங்கே சென்றார்.

அங்கே இவர் சென்று காட்சிகளை பதிவு செய்து கொண்டிருந்த ஒரு நாள் பசியால் தரையில் விழுந்த ஒரு குழந்தை நடக்க முடியாமல் ஊர்ந்து ஊர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.நாவால் அமைக்கப்பட்ட உணவு வழங்கும் இடத்தை நோக்கி நகரும் படத்தை படம்பிடித்தார், ஆனால் அதே நேரத்தில் அந்த குழந்தையை சாப்பிடுவதற்காக அந்த குழந்தைக்கு பின்பதாக ஒரு கழுகு தரையில் பதுங்கியிருந்ததும் அதில் பதிவாகியிருந்தது. தான் புகைப்படம் எடுத்த சூழ்நிலையைப் பார்த்து அதிர்ச்சியடைந்ததாகவும், கழுகை தான் விரட்டியதாகவும் அவர் தனது நண்பரிடம் கூறினார்.

இந்த புகைப்படத்தை பதிவு செய்த பின்னர் அவர் ஒரு சிறிய ஐ.நா. விமானத்தில் ஏறி அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டார். அவர் அந்த புகைப்படத்தை த நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகைக்கு விற்பனை செய்தார். இந்த புகைப்படம் முதலில் 26 மார்ச் 1993 அன்று வெளியிடப்பட்டது, மேலும் உலகம் முழுவதும் அந்த புகைப்படம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதுடன் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

நூற்றுக்கணக்கான மக்கள் அந்தக் குழந்தையின் நிலையைக் கேட்க செய்தித்தாளைத் தொடர்பு கொண்டனர். கார்ட்டரின் கூற்றுப்படி, "கழுகு விரட்டப்பட்ட பிற்பாடு அந்த குழந்தை தொடர்ந்து ஊர்ந்து சென்றது" ஆனால் அது ஐ.நா உணவு மையத்தை அடைந்ததா? இல்லையா? என்பது தெரியவில்லை என்று அந்த செய்தித்தாள் கூறியது. 15 ஏப்ரல் 1994இல், இப் புகைப்படம் சிறப்பு புகைப்படத்திற்கான புலிட்சர் பரிசை வென்றது.

ஆனால் புலிட்சர் புகைப்படத்திற்கான விருது வழங்கப்பட்ட மூன்றரை மாதங்களுக்குப் பிற்பாடு, அந்த புகைப்படத்தை எடுத்த கார்ட்டர் தவறான முடிவெடுத்து தன் வாழ்வை முடித்துக்கொண்டார். ஏனென்றால் அந்த புகைப்படத்தை எடுத்து விற்பனை செய்து பணத்தையும், புகழையும் பெற்றுவிட்டார். ஆனால் அந்த பிள்ளைக்கு உதவி செய்தாரா? அந்த பிள்ளையை காப்பாற்றினாரா? அதற்கு தண்ணீராவது கொடுத்தாரா? என்ற கேள்விகளுக்கு அவரிடத்தில் பதில் இல்லாமலிருந்தது...

ஆம் நண்பர்களே! பார்த்தீர்களா இந்த சம்பவத்தை, எந்த விருதைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டு அதற்காக பிரயாசப்பட்டாரோ அந்த விருதினாலேயே இறுதியில் தன் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டார். நாமும் எம் வாழ்க்கையில் எதை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறோம்? உலகத்தின் பெயர், புகழுக்காக ஓடிக்கொண்டிருக்கும் நாம் எம்மை சூழ தேவையோடு இருப்பவர்களுக்கு உதவி ஒத்தாசையாக வாழ்கின்றோமா? அல்லது எம்முடைய சுயத்திற்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறோமா என்பதை சற்று சிந்தித்துப்பார்ப்போமா?

**மத்தேயு 16:26 மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❒ பர்னபா




கிறிஸ்துவுக்குள் அன்பின் நற்செய்தி வாசகர்களுக்கு இனிய வாழ்த்துக்கள். மறுபடியும் அனலின் நற்செய்தி பகுதியினூடாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

தேவ கிருபையினாலே நாம் இவ்வருடத்தினுடைய ஆறு மாதங்களைக் கடந்து வர தேவன் கிருபை செய்தார். எத்தனை தீமைகள், மோசங்கள், குறைவுகள், ஆபத்துக்கள், வியாதிகள்... ஆம் அத்தனையையும் கடந்து வர, தாங்க பெலன் தந்தார். இன்னும் தருவார். அவருக்கே மகிமையுண்டாகட்டும்! ஆமென்.

**ஏசாயா 50:7 கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார்; ஆகையால் நான் வெட்கப்படேன்; நான் வெட்கப்பட்டுப்போவதில்லையென்று அறிந்திருக்கிறேன்; ஆதலால் என் முகத்தைக்கற்பாறையைப்போலாக்கினேன்.**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, இந்த பூமியில் கணவனுக்கு மனைவி துணையாகவும், மனைவிக்கு கணவன் துணையாகவும்; அதே போல் பெற்றோருக்கு பிள்ளைகள் துணையாகவும், பிள்ளைகளுக்கு பெற்றோர் துணையாகவும்... இப்படியாக ஒவ்வொருவருக்கும் பலதரப்பட்ட துணைகள் இருந்தாலும் அதனாலேயே சிலவேளைகளில் நாம் பல வெட்கங்களையும், வேதனைகளையும், மனவிரக்தியையும் சந்தித்ததுண்டு.

ஆனால் 'கர்த்தராகிய ஆண்டவரை ஒரு மனிதன் தன் வாழ்வில் துணையாக கொண்டிருப்பேனேயாகில் அவன் வெட்கப்படுவதில்லை; வெட்கப்பட்டுப்போவதில்லையென்று' வேதம் சொல்கிறது. ஆம் நமக்கு துணை செய்கிறவர் நம் தேவன். ஆகையால் நாம் நம்பிக்கையோடு சொல்ல முடியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு ஒரு போதும் வெட்கமில்லை — வெற்றியே! என்று.

அன்பானவர்களே, இந்த பூமியில் மனிதனாக வந்த இயேசு கிறிஸ்துவை கவனித்துப் பாருங்கள்.

**ஏசாயா 50:6 அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை.**

**அப்போஸ்தலர் 8:32 அவன் வாசித்த வேதவாக்கியம் என்னவென்றால்: அவர் ஆட்டைப்போல அடிக்கப்படுவதற்குக் கொண்டுபோகப்பட்டார்; மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப் போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார்.**

இப்படியாக வேதனைகளை இயேசு அனுபவித்தும் இயேசு வெட்கப்பட்டுப்போகவில்லை. காரணம் அவர் பிதாவாகிய தேவனை தன்னுடைய துணையாக கொண்டிருந்தார். இதனாலே பிதாவாகிய தேவன் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி மகிமைப்படுத்தினார்.

**பிலிப்பியர் 2:9-11 (9.) ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, 10. இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், 11. பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.**

ஆம் எனக்கு பிரியமானவர்களே, உங்களுக்கு ஓர் நற்செய்தி. நீங்களும் உங்கள் வாழ்க்கையில் நன்மையைக் கண்டடைய இயேசுவை உங்கள் வாழ்வின் துணையாக ஏற்றுக் கொள்ளுங்கள். அவர் உங்களுக்கு துணை செய்வார்.

**ஆதியாகமம் 49:25 உன் தகப்பனுடைய தேவனாலே அப்படியாயிற்று, அவர் உனக்குத் துணையாயிருப்பார்; சர்வ வல்லவராலே அப்படியாயிற்று; அவர் உயர வானத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், கீழே ஆழத்தில் உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், ஸ்தனங்களுக்கும் கர்ப்பங்களுக்கும் உரிய ஆசீர்வாதங்களினாலும் உன்னை ஆசீர்வதிப்பார்.**

தேவனுடைய தாசனாகிய யாக்கோபு தன்னுடைய பன்னிரண்டு பிள்ளைகளையும் ஆசீர்வதிக்கும் போது யோசேப்பை குறித்து மேற்குறிப்பிட்ட வசனத்தில் உள்ளபடி ஆசீர்வதிக்கின்றார்.

ஆம் பிரியமான சகோதரனே, சகோதரியே யோசேப்பின் வாழ்க்கையை கவனித்துப் பாருங்கள். அவன் வாழ்க்கையில் எத்தனை துரோகங்கள், சகோதரரின் பாசமற்ற செயல்கள், எஜமாட்டியின் கபட குணங்கள், சிறை வாழ்க்கை, காரணமில்லாத காயங்கள், வேகமாக வந்த பொய்யை நம்பிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலே மன்னன் பார்வோனாலேயே சிறை செல்லும் நிலை, சிறையில் யோசேப்பை விலங்கு போட்டு ஒடுக்கினார்கள் என வேத வார்த்தை கூறுகின்றது.

ஆம் இன்றைக்கும் அனேகர் வேகமாக வரும் பொய்யை நம்புகிறார்கள். மெதுவாக வரும் உண்மைகளை புறக்கணிக்கிறார்கள். இதனாலே அனேக வேளைகளில் உண்மையானவர்கள் ஒடுக்கப்படுகிறார்கள். ஆனாலும் 'கர்த்தரை தன் துணையாக கொண்டிருக்கும் மனிதனுக்கு கர்த்தர் நிச்சயம் துணை செய்வார்.'

இப்படிப்பட்ட வேதனைகளையும் தாண்டி யோசேப்பினாலே எப்படி மேலே வர முடிந்தது? எகிப்து தேசத்திற்கு அதிபதியாக, ஆண்டவனாக, தகப்பனாக எப்படி வர முடிந்தது?

ஆம்! அவன் நம்பிய தேவனாலே அவனுக்கு அப்படியாயிற்று. அவர் யோசேப்புக்கு துணையாக இருந்தார். அதனாலே அவனுடைய வில் உறுதியாக நின்றது.

துணை செய்யும் தேவன் உங்களோடிருப்பாரானால் உங்கள் வில் எப்பொழுதும் உறுதியாகவே நிற்கும். யாரும் உங்களை வெட்கப்படுத்த அல்லது மேற்கொள்ள முடியாது. கர்த்தர் உங்களை மேன்மைப்படுத்துவார்.

எகிப்து தேசத்திற்கு இரட்சகனாக மாத்திரமல்ல யாக்கோபின் வம்சத்திற்கும் இரட்சகனாக யோசேப்பை தேவன் மாற்றினார்.

**யாத்திராகமம் 14:25 அவர்களுடைய இரதங்களிலிருந்து உருளைகள் கழலவும், அவர்கள் தங்கள் இரதங்களை வருத்தத்தோடே நடத்தவும் பண்ணினார்; அப்பொழுது எகிப்தியர்: இஸ்ரவேலரைவிட்டு ஓடிப்போவோம், கர்த்தர் அவர்களுக்குத் துணைநின்று எகிப்தியருக்கு விரோதமாய் யுத்தம் பண்ணுகிறார் என்றார்கள்.**

கர்த்தர் அவர்களுக்கு துணை நின்று எகிப்தியருக்கு விரோதமாக யுத்தம் பண்ணினார்.

ஆம்! தம்மை நம்பி புறப்பட்ட ஜனங்களை தேவன் கைவிடவேயில்லை. நம்பியவர்களுக்கு துணை நின்று யுத்தம் பண்ணும் தேவனே நாம் நம்பும் தேவன். அவர் தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து.

பிரியமானவர்களே, நீங்களும் உங்கள் வாழ்க்கையில் இயேசுவை சார்ந்து கொண்டு அவருடைய சித்தம் என்ன என்பதனை உணர்ந்து அதற்கு கீழ்ப்படிந்து அவர் மேல் அன்பு வைத்து அதனாலே பாவங்களுக்கு உடன்படாமல் உங்களை காத்துக் கொண்டு யோசேப்பைப் போல, இயேசுவைப் போல தேவனுக்கு உண்மையாக இருப்பீர்களேயாகில் எந்த நிலைமையிலும் நீங்கள் ஒரு போதும் வெட்கப்பட்டுப்போவதேயில்லை. காரணம் தேவன் உங்களுக்கு துணை செய்வார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாவிடை 127
### சரியான பதில்கள்

01. சிசெராவின் இராணுவம் - நியாயாதிபதிகள் 5:21
02. ஈசாய் - தாவீது - 1சாமுவேல் 17:17-18,22
03. இஸ்ரவேலர்- மல்கியா 2:8-9
04. சங்கீதம் 37:31, ஏசாயா 51:7
05. ரெகொபெயாம் - 1இராஜாக்கள் 12:8-14
06. ஆசாரியனாகிய அபியத்தாரின் குமாரன் யோனத்தான் - 1இராஜாக்கள் 1:42
07. யெப்தா, இயேசு - நியாயாதிபதிகள் 11:12, யோவான் 2:4
08. தாவீது - 1சாமுவேல் 26:25
09. ஏசாயா 14:20
10. தாவீது - 1சாமுவேல் 17:33

# குறுக்கெழுத்துப் போட்டி - 125

### சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

03. அகாஸ்வேரு (எஸ்தர் 7:7)
06. காத்திரு (நீதிமொழிகள் 20:22)
08. எருப்பேசேத் (2சாமுவேல் 11:21)
11. எஸ்றா (எஸ்றா 9:15 – குழம்பியுள்ளது)
13. எபெத்மெலேக் (எரேமியா 38:7)

**வலமிருந்து இடமாக**

01. சிதேக்கியா (2நாளாகமம் 36:13)
05. சாமுவேல் (1சாமுவேல் 3:1–18,7:6)
09. சவுல் (1சாமுவேல் 15:27–28)
12. தாவீது (சங்கீதம் 31:9)

**மேலிருந்து கீழாக**

02. இஸ்போசேத் (2சாமுவேல் 4:7)
04. ஆகாப் (2இராஜாக்கள் 21:20)
08. எஸ்றா (எஸ்றா 7:12)
09. சவுல் (1சாமுவேல் 28:20)
10. அசுபாள் (1இராஜாக்கள் 22:42)

**கீழிருந்து மேலாக**

07. எசேக்கியா (2நாளாகமம் 32:30)
13. எருசலேம் (எசேக்கியா 23:4)
14. பெனாயா (1நாளாகமம் 11:22)
15. ஓர்மா (எண்ணாகமம் 21:3)

*எந்த அளவிற்கு ஒரு மனிதன் தேவனோடு நெருங்கி வாழ்கிறானோ அந்த அளவிற்கு தன்னுடைய துன்மார்க்க இருதயத்தைக் குறித்து துக்கப்படுவான்.*

*- சார்ளஸ் ஸ்பேர்ஜன் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஜசிந்தா அக்கா




நகரத்தில் வாழும் குருவி ஒன்று அதிகாலையில் தேவனைத் துதிக்கும் பழக்கமுடையதாய் இருந்தது. ஒவ்வொரு நாளும் தேவனைத் துதித்த பின் நகரத்தைச் சுற்றிப்பார்க்கும். அப்பொழுது வீதியிலே ஜனங்கள் பரபரப்பாய் செல்வதையும், கடையில் ஆர்வமாய் பொருட்கள் வாங்குவதையும், கஷ்டப்பட்டு வேலை செய்வதையும் பார்த்தது. ஆனால் "நாங்களோ சுதந்திரமாய் பறந்து காய்கள், பழங்கள் என்று சாப்பிடத்தக்கதாய் வைத்தீரே... உமக்கு மிக்க நன்றி" என்று சொல்லி ஆண்டவரைத் துதித்தது.

அடுத்த நாள் காலை இந்தக் குருவி ஒரு வீட்டின் முற்றத்தில் உள்ள மரத்தில் வந்து நின்றது. அந்த வீட்டிலிருந்து வந்த சண்டையின் சத்தமும் கெட்ட வார்த்தைகளும் சந்தோஷமாய் இருந்த குருவியின் காதில் விழுந்தது. குருவி சிந்திக்க ஆரம்பித்தது. எங்களைப் பார்க்கிலும் மனுஷர் தான் விசேஷித்தவர்களாம். பரலோகமும் அவர்களுக்குத்தானாம் ஆயத்தப்பட்டிருக்கிறதாம். அப்படியானால் இவர்கள் ஏன் பொல்லாதவர்களாய் இருக்கிறார்கள்? பொல்லாதவர்கள் பரலோகம் செல்ல முடியாதாமே என்று சிந்தித்துக் கொண்டு தனது கூட்டை நோக்கிப் பறந்து சென்றது.

கூட்டைச் சென்றடைந்த குருவி மனுஷருடைய மனநிலைமை என்ன என்பதை நான் சேகரிக்க வேண்டும் என்று நினைத்து ஒரு 'பை'யை எடுத்துக் கொண்டு பறக்க ஆரம்பித்தது. பறந்து போகும் பொழுது காண்கிற மனிதர்களின் மனதின் குணங்களை சேர்க்க ஆரம்பித்தது. ஒருவரிடமிருந்து சண்டை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொருவரிடமிருந்து எரிச்சல், பின்பு பொறாமை, கோபம், வைராக்கியம், வஞ்சகம், பெருமை, தூஷணப் பேச்சு, கீழ்ப்படியாமை, பழிவாங்குதல், வீண் பேச்சு, பேராசை...... "அப்பப்பா.. என்ன... பாரம் 'பை' நிறைந்துவிட்டதே, பறக்க முடியல்லயே.." என்று சொல்லிக் கொண்டு ஒரு சிறு மரத்தின் கொப்பில் வந்து இருந்தது.

குருவியின் நண்பனும் அவ்வழியாய் வந்தது. குருவியைக் கண்டது, "என்ன உன் முதுகில 'பை' ஒன்று தொங்குதே" குருவி தன் கதையை சொல்லி முடித்தது. ஐயையோ.. அப்படியா..? முதலில் இந்தப் பையை வீசிவிடு. அப்பொழுது தான் முன் போல உன்னால் உயரப் பறக்க முடியும் என்றது நண்பன். சின்னப் 'பை' தானே என்றது குருவி. சின்னதோ.. பெரியதோ.. நீ உயரப் பறப்பதற்கு இந்தப் 'பை' உன்னை விடாது. குருவி கீழ்ப்படிந்தது. பையிலிருந்த யாவற்றையும் ஒவ்வொன்றாக வீசியது.

இப்போது தான் இலகுவானதை உணர்ந்து ஆண்டவருக்கும் நண்பனுக்கும் நன்றி சொல்லி உயர வானத்தில் பறந்து சென்றது.

இயேசப்பாவின் பிள்ளைகளே 'பை' ஆகிய உங்கள் இருதயத்தில் இருக்கும் கெட்ட குணங்களை வெளியே வீச ஆயத்தமா?

**பாரமான யாவற்றையும் தள்ளிவிட்டு, இயேசுவை நோக்கி ஓடக்கடவோம். எபிரெயர் 12:1**

---

## குறுக்கெழுத்துப் போட்டி - 125, வினா விடை - 127

### சரியான விடை எழுதியவர்கள்

**கனடா**

01. எஸ். குகன் குடும்பம் +

*வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
+குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்

**திருநெல்வேலி**

02. செல்வன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | ✕ | 02 | | 03 |
| ✕ | | | | | 04 | | | |
| | | | | | 05 | | | |
| 07 | | | | | ✕ | ✕ | 06 | ✕ |
| | ✕ | ✕ | 08 | | | | | |
| | | | 10 | ✕ | 09 | | | |
| 11 | | | | ✕ | | | | 12 |
| | ✕ | | | | | | 13 | |
| 14 | | | | | ✕ | | | 15 |

## குறுக்கெழுத்துப் போட்டி 126

**இடமிருந்து வலமாக**

01. "நன்மையை யோசிக்கிறவர்களுக்கோ .......................... சத்தியமுமுண்டு"
07. கர்த்தர் ஊசாவை அடித்த இடத்துக்கு தாவீது இவ்வாறு பெயரிட்டான்
08. ராஜாவின் அரமனைக்குள் குதிரைகள் பிரவேசிக்கிற வழியில் அவள் கொல்லப்பட்டாள்
09. தன் அறையில் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் துக்கித்துக் கொண்டிருந்தவன் (குழம்பியுள்ளது)
11. இவனின் சகோதரர் 70 பேரும் ஒரே கல்லின் மேலே கொலை செய்யப்பட்டார்கள்
14. இவர்கள் எர்மோனை "சேனீர்" என அழைத்தார்கள்

**வலமிருந்து இடமாக**

04. இவன் ஐந்து வயதாயிருக்கும் போது யோனத்தான் மரித்தான்
05. சுவரில் எழுதின கையுறுப்பைக் கண்டவுடன் இவன் முகம் வேறுபட்டது
10. பெனூவேலின் கோபுரத்தை இடித்துப்போட்டவன்
12. பழைய ஏற்பாட்டில் "தங்கக்கச்சையைக் கட்டிக்கொண்டிருக்கிற ஒரு புருஷனை" தரிசனமாய் கண்டவன்
13. கை கால்களின் பெருவிரல்கள் தறித்துப் போடப்பட்டவன்
15. ராஜாக்கள் யுத்தத்திற்குப் புறப்படும் காலத்தில் அம்மோன் புத்திரரின் தேசத்தை முற்றிகை போட்டவன்

**மேலிருந்து கீழாக**

02. "எங்கள் குற்றம் வானபரியந்தம் வளர்ந்து போயிற்று" என்று கூறியவர்
03. எப்பிராயீம் கோத்திரத்திலிருந்து கானானை சுற்றிப்பார்க்க மோசேயால் அனுப்பப்பட்டவர்

**கீழிருந்து மேலாக**


06. இதன் அர்த்தம் "நீ தராசிலே நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டாய்"
14. இந்த இடத்தில் தர்ஷீஸ் கப்பல்கள் உடைந்தன
15. அமத்சியாவின் தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❐ போதகர் வை.தேவதாஸ்




எனக்கு அருமையான தேவபிள்ளைகளே உங்கள் அனைவருக்கும் உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நீங்கள் அனைவரும் உடல் சுகத்துடனும், மனநிறைவுடனும் இருப்பதற்கு ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் ஆசீர்வாதத் தைக் கூறுகின்றேன். நீங்கள் நம்புகின்ற ஆண்டவர் உங்களை ஒரு போதும் கைவிடவேமாட்டார்.

வாலிபர்களுக்கான தொடர் வேதபாடத்திற்குள் செல்வதற்கு முன்னதாக வேதாகமத்தில் இருந்து ஓர் வாக்குத்தத்தத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

**மீகா 2:13 தடைகளை நீக்கிப்போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்துபோகிறார்.**

பிரியமான தேவபிள்ளைகளே, உங்கள் வாழ்க் கையே தடை எனும் கற்களால் மறைக்கப்பட்டு இருக்கலாம். எனக்கு படிப்பே ஓடுதில்லையே! சரியான வேலை வாய்க்கவில்லையே! திருமணமும் தடைபட்டுக் கொண்டே போகிறதே! ஆவிக்குரிய வாழ்விலும் முன்னேற முடியவில் லையே! என பல தடைகளால் நீங்கள் சோர்ந்து போயிருக்கலாம்.

ஆனால் இன்றைக்கு தேவ வார்த்தை உங்களை நோக்கி வருகின்றது: அது என்ன? 'பயப்படாதே!, நான் உனக்கு முன்னே போய் எல்லாத் தடைகளையும் நீக்கிப்போடுவேன்!' என்பதே ஆகும். ஆம் பிரியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவபிள்ளைகளே சோர்ந்து போகாதிருங்கள். இப்படி பல ஆயிரம் தடைகள் தேவ பிள்ளைகளுக்கு வரும்தான். ஆனாலும் சர்வ வல்லமையுள்ள தேவனாகிய எல்ஷடாய் ஆண்டவர் நம்முடன் இருந்து நமக்கு உதவி செய்து நம்மை பெலப்படுத்துவார்.

'தடைகளை நீக்கிப்போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்து போகிறார்' என்பதன் International Bible Society Lankaன் இலகு தமிழ் மொழி பெயர்ப்பில் இவ்வாறுள்ளது: **"அவர்களுக்கு ஒரு வழியை ஏற்படுத்துகிறவர் அவர்களுக்கு முன் செல்வார்"** எனக்காணப்படுகின்றது. ஆம் அருமையான வர்களே, எங்களுக்கு ஓர் வழியை அவர் ஏற்படுத்துகிறவர். **"எனக்கு இனி வழியேதுமில்லை"** என நீங்கள் திகைத்துள்ளீர்களா? பயப்படாதிருங்கள்! செங்கடலில் வழிதிறந்த சர்வ வல்லமையுள்ள தேவன் இதனை வாசிக்கின்ற உங்களுக்கும் ஓர் வழியைத் திறக்க வல்லவராகவே இருக்கின்றார். இன்னும் அவரை விசுவாசியுங்கள்! அவரை நம்புங்கள்!! உற்சாகமாய் செயற்படுங்கள்! அவர் உங்கள் வாழ்வில் அடைபட்டுள்ள வழிகளைத் திறந்து உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

தொடர்ந்தும் வாலிபர்களுக்கான தொடர் செய்திக்குள் செல்வோம்: வாருங்கள், எமது தொடர் வேதபாடத்தில் 'சாது சுந்தர்சிங்கின் வாழ்க்கையை' தற்பொழுது சுருக்கமாக பார்த்து வருகின்றோம். அந்த வகையில் அதன் தொடரை தொடர்ந்து பார்ப்போம்.

குறிப்பிட்ட நாளில் அதிகாலையில் சுந்தர் எழும்பினார் என்பதனையும் அதிகாலை ஜெபத்தையும் குறித்து உங்களுக்கு கடந்த இதழில் எழுதியிருந்தேன்.

தொடர்க...

அதிகாலையில் எழுந்து குறித்த சுந்தர்சிங் அதிகாலை மூன்று மணிக்கெல்லாம் இறை தியானத்தில் அமர்ந்தார். இறை தியானத்தில் இருந்தவர் "உண்மையான கடவுள் ஒருவர் உண்டு என்றால் நீர் உம்மை எனக்குக் காண்பியும், விடுதலைக்குரிய வழியையும் சமாதானத்தையும் நீர் எனக்குத் தரவேண்டும்" என்று வேண்டுதல் செய்ய ஆரம்பித்தார். இறைவா.... உம்மை எனக்குக் காண்பியும் என தன் ஆன்மாவில் கதறிக் கொண்டிருந்தார். இறை தியானத்தில் வேண்டுவதும், பின்பு அமைதியாக காத்திருப்பதுமாக அன்று அதிகாலை இருந்தார்.

ஆனால் ஒன்றுமே சம்பவிக்கவில்லை. எதனை எதிர்பார்த்து காத்திருப்பது என்பதில் சற்று குழப்பம் அவரிடத்தில் காணப்பட்டது. ஏதாவது ஒரு சத்தம் கேட்குமா? அல்லது ஏதாவது ஒரு தரிசனம் தெரியுமா? அல்லது நான் மெய்மறந்த நிலைக்கு சென்றுவிடுவேனா? என்று அங்கலாய்க்கலானார். எனினும் ஒன்றும் சம்பவிக்கவில்லை. நேரம் கடந்து கொண்டே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக இன்னும் அரை மணி நேரம் கடக்குமானால் அவர் விழுந்து சாவேன் என நினைத்து லூதியானா எக்ஸ்பிரஸ் அந்த வழியே வந்துவிடும்.

சடுதியிலே அவருடைய தியான அறையிலே ஒரு பேரொளி வீசியது. அவ் ஒளியில் அவர் மிகவும் வெறுத்து வந்த இயேசு கிறிஸ்துவின் சாயலைக் கண்டார். அந்த அறையில் இயேசு கிறிஸ்து இருந்தார். பிரகாசமுள்ள தெய்வமாக அன்பையும், சமாதானத்தையும், சந்தோஷத்தையும் பிரதிபலித்துக் கொண்ட வராக சுந்தர்சிங்கை நோக்கினார் ஆண்டவர் இயேசு. அவர் தமது ஆணிகள் பாய்ந்த கரத்தை சுந்தர் சிங்கிற்கு காண்பித்து "நீ ஏன் என்னைத் துன்பப்படுத்து கிறாய்? நான் உன்னுடைய இரட்சகர்" என்று சொன்னார்.

தேவன் தம்மை மனிதர்களுக்கு பலவிதங்களில் வெளிப்படுத்துகிறார். ஏனெனில் ஒவ்வொரு மனிதர்களையும் வெவ்வேறு பண்புகளுடன் தேவன் படைத்துள்ளார். எனவே அவரவர் மனநிலைக்கு ஏற்றவாறு தேவன் தம்மை வெளிப்படுத்துவதுண்டு. இருப்பினும் அவரது வெளிப்பாடுகள் அனேக சந்தர்ப்பங்களில் ஒரேவிதமாகக் காணப்படுவதுமுண்டு.

சுந்தர் சிங்கிற்கு இயேசு வெளிப்பட்டவிதமானது பல ஆண்டுகளுக்கு முன்பதாக தமஸ்குவின் வீதியிலே தர்சு பட்டணத்தானாகிய சவுலுக்கு வெளிப்பட்ட விதத்தினை ஒத்ததாகவே காணப்படுகின்றது. சவுல் எப்படி கிறிஸ்தவர்களை வெறுத்தாரோ அப்படியே சுந்தர் சிங்கும் வெறுத்தார். சவுலை எப்படி பேரொளியின் மகிமையால் சந்தித்தாரோ அவ்வண்ணமே சுந்தர் சிங்கையும் சந்தித்தார். சவுலிடம் தேவன் எந்தக் கேள்வியைக் கேட்டாரோ அதே கேள்வியை சுந்தர் சிங்கிடமும் கேட்டார்.

அனேக வருடங்களுக்கு பின்பதாக நான் கிறிஸ்துவை சந்தித்த விதத்தைக் குறித்து சுந்தர்சிங் பின்வருமாறு கூறுகின்றார்:

அதிகாலை எனது தியானத்தில் தரித்திருந்தேன். கிருஷ்ணராவது, புத்தராவது அல்லது ஏதாவது ஓர் இந்து அவதாரமாவது எனக்கு காட்சியளிக்க வேண்டும் எனக் காத்திருந்தேன். அவைகள் ஒன்றுமே எனக்குத் தோற்றமளிக்க வில்லை. ஆனால் ஓர் வெளிச்சம் மட்டுமே அறையில் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அது எங்கேயிருந்து வந்தது என்று காண நான் கதவைத் திறந்தேன். ஆனால் வெளியில் எங்கும் இருளாக இருந்தது. நான் மீண்டும் உள்ளே வந்தேன். அந்த வெளிச்சமானது இன்னும் பிரகாசித்தது. கடைசியில் ஒரு பெரிய பிரகாசமான பந்தைப் போல காட்சியளித்தது. அந்த வெளிச்சத்தில் நான் எதிர்பார்த்த உருவத்தை அல்ல; "ஜீவனுள்ள கிறிஸ்துவைக் கண்டேன்". அவரை செத்தவரென்றே நான் கணக்கிட்டிருந்தேன். ஆனால் அன்று அவருடைய மகிமையான அன்பின் முகத்தையோ அல்லது அவர் பேசின சில வார்த்தைகளையோ நான் மறக்க முடியாது.

"நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்? பார் நான் சிலுவையிலே உனக்காகவும் முழு உலகத்திற்காகவும் மரித்தேன்" என்ற இந்த வார்த்தைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னலைப் போல என் இருதயத்தை தொட்டன. அவருக்கு முன்பாக நான் தரையில் விழுந்தேன். என் இருதயம் சொல்ல முடியாத சந்தோஷத்தினாலும், மகிழ்ச்சியினாலும் நிரப்பப்பட்டது. என்னுடைய முழு ஜீவியமும் முற்றிலும் மாற்றப்பட்டது. என விவரிக்கின்றார்.

அதுவரைக்கும் சுந்தர் சிங்கின் வாழ்க்கையில் இருந்த ஆன்மீக தாகம் தனக்குள் தணிந்ததை அவர் உணர்ந்தார். அவர் வாழ்க்கை முழுவதுமாக மாறியது. அவர் அடைந்த இந்த மகத்தான பரவசமான அனுபவத்தில் இருந்து அவரைச் சந்தேகப்படவைக்கவோ அல்லது மாற்றவோ யாராலும் முடியவில்லை.

இவ்விதமான இந்தப் புதிய அனுபவத்தைப் பெற்ற சுந்தர் சிங் உடனடியாக தனது தந்தையிடம் சென்று தான் ஒரு கிறிஸ்தவனாகிவிட்டதைச் சொன்னார். அவருடைய தந்தை இதனை முதலில் நம்பவில்லை. ஆனால் பிற்பாடு அவருடைய குடும்பம் முழுவதுமே சுந்தர் சிங் கிறிஸ்தவனாக மாறுவதற்கு எடுத்த தீர்மானத்தைக் கண்டு அதிர்ச்சியுற்றனர். எனவே சுந்தர் சிங் வீட்டை விட்டுத் துரத்தப்பட்டார்.

அவர் உண்பதற்கு உணவோ, தங்குவதற்கு உறைவிடமோ அவருக்கு கிடைக்கவில்லை. ஒரு மரத்தின் அடியிலேயே தங்கலானார். பிற்பாடு மீண்டும் அவர் வீட்டிற்குள் அனுமதிக்கப்பட்டார். ஆனால் வீட்டின் வெளிப்பகுதியில் வைத்தே அவருக்கு உணவுகள் பரிமாறப்பட்டது. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த வேலையாட்களோடு தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டார்.

இருப்பினும் சுந்தர்சிங் மனநிலையில் பரிபூரண மகிழ்ச்சியோடும் இயேசு கிறிஸ்துவுக்காக எதனையும் பொறுமையோடு ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் இருந்தார். இறுதியில் நஞ்சு கொடுத்து அவரை சாகடிக்க முயன்றனர். தேவகிருபையால் உயிர் பிழைத்தார். பிற்பாடு வீட்டில் இருந்து துரத்தப்பட்ட சுந்தர்சிங் நோய்வாய்ப்பட்டார். இறக்கும் தறுவாயையும் அடைந்தார். இருப்பினும் அவரின் அன்பின் சித்தம் கொண்ட ஆண்டவர் தம் தெய்வீக சித்தத்தை சுந்தர் சிங்கின் வாழ்க்கையில் நிறைவேற்றுவதற்காக மரணப்பிடியில் இருந்த தமது மகனை மீட்டெடுத்தார்.

வீட்டிற்கு வெளியே வந்த சுந்தர்சிங் லூதியானாவில் இருந்த அருட்பணியாளர்களிடம் சென்று அவர்களோடு தங்கினார். வேத வசனங்களை வாஞ்சையோடு கற்றுக்கொள்ள ஆரம்பித்தார். அத்தோடு தனது 16ஆவது அகவை நாளன்று சில்மா நகரத்தில் ஞானஸ்நானம் பெற்றார். ஆழமான சிந்தனைக்கும் உறுதியான ஜெபத்திற்கும் பின்னர் சாது சுந்தர்சிங் தன்னைப் பரிபூரணமாக கிறிஸ்துவின் கரத்தில் அர்ப்பணித்தார். அவர் ஒரு கிறிஸ்தவ சாதுவாக மாறினார். வெறும் கால்களோடும், கையில் ஏந்திய வேத புத்தகத்தின் பகுதியான புதிய ஏற்பாட்டோடும் எந்தவிதமான மனிதரின் உதவியும் இல்லாத நிலையில் தன்னை ஆட்கொண்ட கிறிஸ்துவுக்காக அவர் புறப்பட்டுச் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலாத்தியர் 6:14 நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டா திருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்.**

என்ற வசனத்தை தன்னுடைய வாழ்க்கையின் குறிக்கோளாக ஏற்றுக்கொண்டார். என்மீது உள்ள அன்பினால் இயேசு கிறிஸ்து தம்மை தியாகம் பண்ணினார். அதனைப் போலவே நானும் இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள என்னுடைய அன்பினால் என்னைத் தியாகம் செய்ய வேண்டும் என்று அவர் அடிக்கடி கூறுவார்.

ஆம் அருமையானவர்களே, நம்மை நேசிக்கும் அன்பின் தெய்வத்திற்காக நாம் நமது வாழ்வில் பரிசுத்தத்தைக் காத்துக் கொள்வோம். மறு இதழில் தொடருவோம்..

தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

# வினா விடை - 128

01. "உங்கள் வாசல்களில் சத்தியத்துக்கும் சமாதானத்துக்கும் ஏற்க நியாயந்தீருங்கள்" என்றது யார்?
02. "ராஜாவாகிய என் ஆண்டவன் தேவனுடைய தூதனைப் போல இருக்கிறார்" என்றது யார்?
03. "சமாதானத்துடனே போ... உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்கு கட்டளையிடுவாராக" என்றவன் யார்?
04. "என் கட்டளையினால் தூதாட்கள் கப்பல்களிலே போவார்கள்" என்று வாசிப்பது எங்கே?
05. "கர்த்தர் பூமியிலே ஒரு புதுமையைச் சிருஷ்டிப்பார்" என்று வாசிப்பது எங்கே?
06. இரண்டு புதுக் கயிறுகளாலே கட்டிக் கன்மலையிலிருந்து கொண்டு போகப்பட்டது யார்?
07. "இவரே சமாதான காரணர்" என்றது யார்?
08. "என் தூதனானவர் உனக்கு முன் செல்லுவார்" என்றது யார்?
09. "அவைகள் ஒரே மேய்ப்பனால் அளிக்கப்பட்டது" எவைகள்?
10. "அதற்குச் சமாதானமிருக்கையில் உங்களுக்கும் சமாதானமிருக்கும்" என்றது யார்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வார்த்தையின்படி ஆயத்தப்படுத்து!

❒ திருமதி. J.பிலிப்




இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். சகோதரிகளே, மறுபடியும் அனல் சஞ்சிகை மூலம் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கர்த்தருடைய கிருபையால் 2025ஆம் ஆண்டின் அரைவாசி நாட்களை கடந்து வந்துவிட்டோம். இன்னும் நம்மை உயிருடன் வைத்திருக்கும் எம் ஆண்டவருக்கே துதி கனம் மகிமை உண்டாகட்டும்.

எலியா தீர்க்கதரிசிக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிருந்தது.

**1இராஜாக்கள் 17:9 நீ எழுந்து சீதோனுக்கடுத்த சாறிபாத் ஊருக்குப் போய், அங்கே தங்கியிரு; உன்னைப் பராமரிக்கும்படி அங்கே இருக்கிற ஒரு விதவைக்குக் கட்டளை யிட்டேன் என்றார்.**

எலியா கர்த்தருடைய வார்த்தையின்படி சாரிபாத் ஊருக்கு வந்த போது, அங்கே ஒரு விதவை விறகு பொறுக்கிக் கொண்டிருந்தாள். சாரிபாத் ஊரில் எத்தனையோ விதவைகள் இருந்திருக்கலாம். ஆனால் கர்த்தர் இவ் விதவையைத் தான் எலியாவை போஷிக்கும்படி ஆயத்தப்படுத்தியிருந்தார். சாவுக்கு ஆயத்தப் படுத்தும் நிலையில் இருந்த விதவையிடம் கர்த்தரால் எலியா அனுப்பப்பட்டார்.

அவள் என்ன செய்து கொண்டிருந்தாள்?

விறகு பொறுக்கிக் கொண்டிருந்தாள்.

எதற்கு விறகு?

தானும் தன் மகனும் மரணத்தைச் சந்திக்கப் போகிறார்கள். அதற்கு முன் தன்னுடைய வீட்டில் இருந்த ஒருபிடி மாவும் கொஞ்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணையிலும் ஒரு அடையை செய்து சாப்பிட்டு செத்துப்போக விறகு பொறுக்கு கின்றார். (1இராஜாக்கள் 17:12)

விதவையைக் கூப்பிட்டு எலியா தனக்கு குடிக்க கொஞ்சம் தண்ணீர் ஒரு பாத்திரத்தில் எடுத்துவரும்படி கேட்டார். தண்ணீர் மட்டும் தான் கேட்கிறார். சரி போய் எடுத்துவருவோம் என்று கொண்டுவர அவள் போகிற போது அவன் அவளை மீண்டும் கூப்பிட்டு கொஞ்சம் அப்பமும் உன் கையிலே எனக்கு கொண்டு வா என்றான் (1இராஜாக்கள் 17:11)

அவளிடம் இருந்ததே ஒரு பிடி மாவும் கொஞ்ச எண்ணெயும். தானும் தன் மகனும் சாப்பிட்டு செத்துப்போக இரண்டு விறகு மட்டும் பொறுக்கினாள். அவள் தன்னுடைய உண்மை யான நிலையை எலியாவிடம் கூறினாள்.

ஆனால் எலியாவோ, பயப்படாதே! உன் வார்த்தையின்படி ஆயத்தப்படுத்து, ஆனால் முடிவில் அதிலே எனக்கும் கொண்டு வா, பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம் என்றான்.

எலியாவின் சொற்படி அவள் செய்தாள். தனக்கும் மகனுக்கும் மட்டும் ஆயத்தப்படுத் தியதை எலியாவிடம் கொண்டு வந்தாள்.

நடந்த அற்புதம் தான் என்ன?

பானையில் மா செலவழிந்து போக வில்லை, கலசத்தில் எண்ணெய் குறைந்து போகவும் இல்லை.

அவள் மட்டும் அல்ல, அவள் வீட்டார் அனைவரும் அனேக நாட்கள் சாப்பிட்டார் கள்.

காரணம்: வார்த்தை யின்படி செயற்பட்டார்கள்.

சகோதரியே, நீயும் ஒரு வேளை ஒரு இக்கட்டான சூழ்நிலைக்குள் போய்க் கொண்டிருக்கலாம். யாரும் உன்னைக் காணவில்லை என்று நீ சிந்திக்கிறாயா? விதவையைக் கண்ட தேவன் உன்னையும் காண்கிறார். நீ செய்ய வேண்டியது என்ன? எலியாவின் சொற்படி செய்த விதவை போல நீயும் தேவனு டைய வார்த்தையின்படி செய் தால் உன் வாழ்க்கையில் இருக்கும் குறைவுகள் நீங்கும். நீயும் உன் வீட்டார் அனை வரும் திருப்தியடைந்து ஆசீர் வதிக்கப்படுவீர்கள்.

**மத்தேயு 24:35 வான மும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## மார்காஷியஸ்
## 1852 - 1908

### முழுங்காலே திறவுகோல்

காலரா. இப்பெயரைக் கேட்டதும், உள்ளத்தில் பீதி எழும்புவது நிச்சயம். ஆம்! உயிரைப் பறிக்கும் ஆட்கொல்லி நோய் இது.

1902ஆம் ஆண்டு இக்கொள்ளை நோய் திருநெல்வேலியின் நாசரேத்தை தாக்கியது. மக்கள் செத்து மடிந்தனர். பலர் அனாதைகளாக்கப்பட்டனர். ஆற்றுவாரும், தேற்றுவாரும் இல்லாமல் மக்கள் அழுது புரண்டனர்.

மார்காஷியஸ் ஐயர், மக்களின் மனநிலையை அறிந்தவர். மன வருத்தம் அடைந்தார். மனிதரை காப்பாற்றும் வழிமுறையை யோசித்தார். அவசரம் அவசரமாய் ஆலயத்தினுள் நுழைந்தார். அழுது, அழுது ஜெபித்தார். ஆண்டவர் மட்டுமே குணமாக்க முடியும் என்பதையறிந்து மணிக்கணக்காய் மன்றாடி நின்றார்.

வேண்டுதல் கேட்கப்பட்டது. தினசரி திருவிருந்து ஆராதனை நடத்த தீர்மானம் செய்தார். அம்முறைகளை கடைபிடிக்கச் செய்தார். மக்கள் மத்தியில் காணப்பட்ட மரண பயத்தையும், மரித்தோரின் ஆவிகளைப் பற்றிய பயத்தையும் களைந்தார்.

ஆதரவற்றோர் பிள்ளைகளுக்காக ஆதரவற்றோர் இல்லத்தை ஏற்படுத்தினார். ஆசிரியர் பயிற்சி பள்ளியையும் ஆரம்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவமனையை கட்டினார். உபதேசிமார்களுக்காக இறையியல் கல்லூரி ஒன்றையும் ஆரம்பித்து நடத்தினார்.

நாசரேத் தபால் அலுவலகத்திற்கு தந்தி வசதியைப் பெற்று தந்தார். மக்களின் நன்மைகளுக்காக செயல்பட்டதால் கைசர் - இ - ஹிந்த் என்ற விருதை அரசிடமிருந்து பெற்றார்.

'நாசரேத் நகரின் தந்தை' என்றழைக்கப்படும் மர்காஷியஸ் இதே நாள் 1908ஆம் ஆண்டு விண்ணக தந்தையிடம் தஞ்சம் புகுந்தார். நாசரேத்தில் காணப்படும் ஆலயம் அவரின் கனவின் செயல் வடிவமாகும்.

**அன்பரே! மக்களின் முன்னேற்றத்திற்காக எப்பணிகளைச் செய்து வருகின்றீர்கள்?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: எவ்வளவுக்கதிகமாக எழுப்புதலுக்காக ஜெபிக்கிறோமோ அவ்வளவுக்கதிகமாய் எழுப்புதலை வாஞ்சிப்போம் – லியோனார்டு ரேவன் ஹில்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஏப்ரல் 27**

# இராபர்ட் மாரீஸன்
# 1782 - 1834



## வேலையே போனாலும்...

19ஆம் நூற்றாண்டின் பாதி. சீன தேசம் சுவிசேஷகர்களை தன் நாட்டினுள் உள்ளே அனுமதிக்காமலிருந்தது. வியாபாரத்திற்காக வந்த கிழக்கிந்திய கம்பனியாரும் சுவிசேஷத்தை அறிவிக்கவும், அப்படி அறிவிப்போருக்குத் தடையாகவும் இருந்தனர்.

இராபர்ட் மாரீஸன், சீனாவுக்காக ஆத்மீக பாரம் கொண்டார். எப்படியாவது அங்குள்ள மக்களை கிறிஸ்துவின் பாதையில் நடத்த தீவிரம் காட்டினார். கிழக்கிந்திய கம்பெனி மூலமாகவே தன் பணியைத் தொடங்கினார். ஓர் வியாபாரியாகவும், அதே வேளையில் மிஷனெரியாகவும் தன் பணியைத் தொடங்கினார்.

18 மாதங்களில் சீன மொழியில் அகராதியை உண்டுபண்ணினார். இதனால் கிழக்கிந்திய கம்பெனியார் அவரைப் பாராட்டி மொழி பெயர்ப்பாளர் பதவியை அவருக்குத் தந்தனர். குடும்ப வாழ்வில் பல சோதனைகள் அவரைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தாலும், அவைகளைப் பொருட்படுத்தாமல் முழு கவனத்தையும் வேதாகமத்தை மொழிபெயர்க்கும் பணியில் செலுத்தினார்.

1815ஆம் ஆண்டு சீன மொழியில் புதிய ஏற்பாட்டை மொழிபெயர்த்து வெளியிட்டார். இதனால் கிழக்கிந்திய கம்பெனி இவரை வேலை நீக்கம் செய்தது. ஆயினும், இவருடைய அறிவுத்திறனால் மீண்டும் வேலைக்குச் சேர்ந்தார். பல இன்னல்களும், இடையூறுகளும் வந்த போதிலும் 1824ஆம் ஆண்டு முழு வேதாகமத்தையும் சீன மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

சீனப் பெண்கள் மத்தியில் கிறிஸ்து அறிவிக்கப்பட வேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறியதால் அநேகப் பெண்கள் மாரீஸன் வீட்டிலேயே வேதபாட வகுப்புக்களில் கலந்து கொண்டு ஊழியர்களாக மாறினார்கள்.

சீனாவில் 25 வருடங்கள் கடினமாகப் பணிசெய்த மாரீஸன், அழியாத பொக்கிஷமான வேதாகமத்தை அம் மொழியில் தந்தது உலகம் உள்ளவரை போற்றுதலுக்குரியது.

**அன்பரே! வேதாகம மொழி பெயர்ப்பில் நீங்கள் உதவலாம் அல்லவா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: உலகிலே அதிகக் கடினமான பணிக்களத்தை எனக்குத் தாரும். அங்கு உமக்கென்று ஊழியம் செய்வேன். — இராபர்ட் மாரீஸன்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஆகஸ்டு 01**

---

# இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

"தாய் தகப்பனற்றவன்,
தசமபாகம் பெற்றவன்,
தந்தை ஆபிரகாமிலும் பெரியவன்,
அண்ணன் ஆரோனிலும் பெரியவன்"
யார்?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

**அனல் 2025 வைகாசி - ஆனி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:**

ஏசா யாக்கோபு கானான் வந்தவுடன் யாக்கோபை விட்டு வேறு (சேயீர்) தேசத்திற்கும்; யாக்கோபு பதான் ஆராமை விட்டு கானான் தேசத்திற்கும் வந்து குடியேறியது. (ஆதியாகமம் 36:6, 31:18)

*சரியான விடை எழுதிய அனைவருக்கும் பாராட்டுக்கள்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போதகர் வேதநாயகம் மகாராஜா




தேவனுக்குப் பயப்படும் பயம் நன்மையானது. இப் பயம் மனிதனை நித்திய வாழ்வுக்கு நேராகக் கொண்டு செல்லும். மற்றும் மனிதனை தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி, தூய்மையான வாழ்வு வாழத்தூண்டும்.

தேவன் எமக்குத் தந்த வார்த்தையின்படி வாழவேண்டும் என நினைத்து வாழ்வதும், அவரின் சித்தத்தின்படி வாழவேண்டும் என்பதும் கூட கர்த்தருக்கு பயப்படும் பயத்தின் வெளிப்பாடாகும். "நாங்கள் பாவம் செய்கிற சந்தர்ப்ப சூழ்நிலை வருகிற போது என்னுடைய கர்த்தர் அதைக் காண்கிறார் என்று நினைத்து செய்ய நினைத்ததை செய்யாமல் விடும்போது, அது தேவனுக்குரிய பயம் எங்களுக்குள் இருப்பது என்பதற்கான அடையாளம்" ஆகும். (ஆதியாகமம் 39:9)

"ஆண்டவராகிய இயேசு எனக்காக பாடுபட்டாரே, கர்த்தராகிய இயேசு என்னுடைய பாவத்தை தம் சரீரத்தில் சுமந்து நான் பெற்றுக் கொள்ள வேண்டிய தண்டனையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவர் பெற்றுக் கொண்டாரே, அவரை நான் ஒரு போதும் புண்படுத்தக் கூடாது என்கிற நினைவு"** எங்களுக் குள் வரும் என்றால் அது தேவனுக்குப் பயப்படுகிற பயம்.

"தேவனுக்குப் பயப்படும் பயம் என்பது எப்போதும்எங்களை நன்மைக்கு நேராகவே நடத்திக் கொண்டு போகும்."

"தேவனுக்குப் பயப்படும் பயம் என்பது எங்களுக்கு நித்திய ஜீவனைத் தருவதாகவே இருக்கும்."

அறிஞர்கள் பயத்தை இரண்டு விதமாக பிரித்துள்ளார்கள்.

**1. உய்வுப்பயம் - நன்மையானது**

**2. கற்பனைப் பயம் - தீமையானது**

**உய்வுப்பயம் என்பது மனித னுக்கு இருக்கத்தான் வேண்டும். அது இருப்பது தேவையானது.**

உதாரணமாக; எரிந்து கொண்டி ருக்கும் நெருப்பில் கையை வைக்கக் கூடாது என்ற எண்ணம் மற்றும் வாகனம் வீதியாலே வரும் போது நான் நடுவீதியில் நிற்கக்கூடாது என்ற மனநிலை போன்றவை உய்வுப் பயமாகும். இது மனிதனுக்கு இருக்க வேண்டும்.

**ஆனால் கற்பனைப்பயம் என்றால் அது மனிதனை விழுந்து போகப்பண்ணும், அவனை நிலை தடுமாறப்பண்ணும், தேவனுடைய வழியை விட்டு நீங்கப்பண்ணும். மாத்திரமல்ல கற்பனைப்பயம் வியாதி யைக் கொண்டு வரும். இன்னும் எத்தனையோ விதமான பாதிப்புக் களை மனிதனுக்கு ஏற்படுத்தும்.**

வியாதி உள்ள நபராக இருப்பீர் கள் என்றால் ஒரு போதும் கற்பனை பயம் உங்களைத் தொடுவதற்கு விட வேண்டாம். உங்களுக்கு வியாதி இருப்பது தெரியும் ஆனால் கிறிஸ்தவர் களாகிய எங்களுக்குத் தெரியும் **எங்களுடைய தேவன் அவர் சுகம் கொடுக்கிற கர்த்தர்.** நாம் கற்பனைப் பயத்திற்கு இடம் கொடுத்தால் அந்த வியாதி இரட்டிப்பாய் மாறும். இன்னும் வியாதி பெலனடையும். ஒரு வேளை அந்த வியாதி எங்களைத் தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிடும்.

பவுலுக்கு ஒரு முள் கொடுக்கப் பட்டிருந்தது. ஆனால் அவர் அந்த முள் தன்னுடைய வாழ்க்கையை மேற் கொள்வதற்கு இடம்கொடுக்கவில்லை. பவுலினுடைய முன்மாதிரியைப் பாருங்கள். **நான் மூன்று தடவைகள் ஆண்டவரே இந்த முள் என்னை விட்டு நீங்கும்படி செய்யும் என்று ஜெபம்பண்ணினேன். ஆனால் ஆண்டவர் சொன்னார், 'என் கிருபை உனக்குப் போதும், உன் பெலவீனத் தில் என் பெலன் பூரணமாய் விளங் கும்' என்று.** நீங்கள் வியாதியோடு இருக்க முடியும், ஆனால் சொல்லுங் கள் ஆண்டவரே இந்தக் கற்பனைப் பயம் என்னை ஆட்கொள்வதற்கு விடா தேயும். என்னுடைய பெலவீனத்தில் உம்முடைய பெலன் பூரணமாய் விளங்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலும்புக்கூடுகள் அல்லது மண்டை ஓட்டைக் கண்டால் பேய் என்று சொல்வோம். மனிதன் என்ற தோற்றத்தைக் கொடுப்பதே அந்த எலும்புக் கூடுகள் தான். எலும்புக்கூடு பேய் என்றால் எங்கள் எல்லோருக்குள்ளும் ஒரு பேய் உண்டு. கற்பனையாலே சிலவேளை எங்களுக்குப் பயங்கள் உண்டாகிறது. ஆனால் நீங்கள் நினைப்பதைப் போன்று அது பேய் அல்ல. **உங்களுடைய வாழ்க்கையைக் கெடுக்கும்படி சில பயத்திற்கு நீங்கள் இடங்கொடுத்ததாலே உண்மையில் சிலர் தேவனைவிட்டுவிட்டீர்கள். கற்பனைப் பயத்திற்கு இடம்கொடுத்த தாலே பார்க்க வேண்டிய சில மனிதர்களை மனிதர்களாக பார்க்க முடியாமல் இருக்கிறது: நாம் சேர வேண்டிய மனிதர்களோடு சேரமுடியாமல் இருக்கிறது.** ஏனென்றால் கற்பனைப் பயம். இந்தப் பயத்தை நாங்கள் வெளியே கொண்டு வர வேண்டும். எங்களுடைய வாழ்வுக்குள் பயம் இருக்குமென்றால் அது மிக அதிகமான வேதனைக்கு முகம் கொடுக்க எங்களைத் தள்ளும்.

**நீதிமொழிகள் 24:22 சடிதியில் அவர்களுடைய ஆபத்து எழும்பும்; அவர்கள் இருவரின் சங்காரத்தையும் அறிந்தவன் யார்?**

*ஒருவர் சவுதி அரேபியாவுக்கு தொழில் நிமித்தம் செல்ல ஆயத்தப்பட்டார். அப்போது அவர் இந்த வார்த்தையை வாசிக்கும் போது "சடிதியில்" என்ற வார்த்தையில் உள்ள "டி" க்கு பதிலாக "வு" என்று உச்சரித்து "சவுதியில்" என வாசித்தார். அதனால் அங்கே செல்ல ஆயத்தப்பட்டவர் இப்போது நான் அங்கே செல்ல மாட்டேன், வேதவார்த்தையே சொல்கிறது சவுதியில் ஆபத்து எழும்பும் என்று குழம்பிப் போனார்.*

வேதத்தை வைத்தே எங்களுடைய சரியான கவனிக்காமை, புரிந்து கொள்ளாமை கூட சில கற்பனைப் பயங்களை எங்களுக்குள் தோற்றுவித்துவிடும். சிலருக்கு வியாதி வந்தால் கூட நான் செத்துவிடுவேனோ என்ற பயம் எழும்பிவிடும்.

*ஒரு அம்மா 2014ஆம் ஆண்டு என்னிடம் சொன்னார், நான் 2015ஆம் ஆண்டு மரித்து விடுவேன் என்று. ஆனால் அவர் இன்றைக்கும் உயிரோடுதான் இருக்கிறார்.*

சில பயங்கள் தேவன் எங்களுடைய வாழ்விற்குள் வைத்த திட்டங்களையெல்லாம் கொச்சைப்படுத்திவிடும், சில பயங்கள் தேவனுக்கு முதலிடம் கொடுக்காது. கற்பனைப்பயம் உங்களை ஆட்கொள்வதற்கு ஒரு போதும் இடங் கொடுக்காதீர்கள்.

இந்தக் கற்பனைப் பயத்தால் சில குடும்பங்களில் உறவுநிலை கூட சரியில்லாமல் இருக்கிறது. சில கணவன் மனைவிக்கிடையில் கற்பனைப்பயத்தினால் அவர்களுக்குள் ஐக்கியம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மனைவி அழகாக தலைவாரி (சீவி) இருந்தால் கணவனுக்குச் சந்தேகம் - கற்பனைப்பயம் குடும்பங்களுக்குள் உறவுகளைப் பாதிக்கிறது. கணவன் தாமதமாக வீட்டிற்கு வந்தால் என்ன நடைபெற்றது, தொலைபேசி அழைப்பெடுத்து பார்த்தால் தொலைபேசி இயங்காத நிலையில் இருக்கிறது என்ன நடைபெறுகிறது என்று சந்தேகப்படுவோம்.*

தவறான கற்பனைகள் குடும்ப வாழ்க்கைக்குள் சந்தோஷத்தை, சமாதானத்தைக் கெடுத்துவிடும். இன்னும் சில குடும்பங்கள் கூட இந்த பயத்தினால் பிரிந்தே போய்விட்டது.

**இது ஒருவகையான மனப் பாதிப்பு.** பயம் தேவனை அறிந்த பிள்ளைகளுக்குள் வருவதற்குரிய காரணங்கள் மூன்றை குறித்து ஆராய்ந்து பார்க்கலாம்.

## 01. பாவம் பயத்தைக் கொண்டு வரும்

**ஆதியாகமம் 3:10 அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக் கொண்டேன் என்றான்.**

**ஆதாம் ஏன் பயந்து ஒளித்துக் கொண்டான் என்றால் அவன் பாவம் செய்தபடியால் ஒளித்துக் கொண்டான்.** தேவனோடு இருக்கிற எங்களுடைய உறவைக் கெடுக்கிற, தேவனோடு நடக்கமுடியாதபடிக்கு, தேவனோடு உள்ள ஐக்கியத்தை உடைக்கிற பயம் எப்படி வந்தது என்றால் பாவம் எந்த கணம் அவனுக்குள் வந்ததோ அந்தக் கணம் அவனுக்குள் பயமும் வந்தது. பாவம் செய்ய முதல் பயமற்ற மனநிலை ஆதாமுக்குள் இருந்தது ஆனால் பாவத்தை செய்த பிற்பாடு ஒரு பயம் பற்றிக் கொள்கிறது. உள்ளத்தில் இருக்கிற பாவம் அந்தப் பயத்திற்குரியது. தேவனுடைய கட்டளையை மீறி பாவம் செய்ததால் ஆதாமுக்குள் பயம் வந்தது. **நேர்மையாக, பரிசுத்தமாக, ஆவியினால் நிறைந்தவர்களைக் காணும் போது பயம் ஒன்று வருகிறதா? அப்படியென்றால் செய்யக்கூடாத ஒன்றைச் செய்திருக்கிறோம்.**

*ஒரு சகோதரி திடீரென சொன்னார், எனக்கு ஒரே பயமாக இருக்கிறது என்று. அவருடைய பயத்திற்கான காரணம் என்னவென்று விசாரிக்கப் போனால் தான்செய்த தவறு எதையும் அவள் சொல்லவில்லை. மாறாக பயமாய் இருக்கிறது போதகரே ஏன் பயமாக இருக்கிறது? என்று கேட்டுக்கொண்டிருந்தாள். அப்போது அவளுக்கு ஏன் இவ்வளவு பயம் என்று ஆராய்ந்து பார்க்கிற போது அவள் தன்னுடைய கணவனுக்கு துரோகம் செய்திருக்கிறாள்.* அதை அவள் நினைக்கும் போதெல்லாம் அவளை அறியாமலேயே அவளுக்குள் ஒரு பயம் அவளை பற்றிப்பிடித்துக் கொள்ளும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் ஒரு மனிதனை பயமுள்ளவனாக மாற்றும். தேவனோடுள்ள உறவைவிட்டு பிரிக்கிற அந்த பயத்தைக் குறித்து சொல்கிறேன். **பாவத்தால் வந்த பயத்தை ஆதாம் சரி செய்வதற்கு முயற்சிக்காததால் அவன் ஏதேனில் இருந்து துரத்தப்பட்டான். ஆதாம் அந்த பாவத்திற்குரிய காரணம் என்னவென்பதை தன்னை உருவாக்கிய தேவனிடத்தில் அறிக்கை செய்யாததினால் அவன் தோட்டத்தில் இருந்து துரத்தப்பட்டான்.** ஆதாமும் ஏவாளும் தேவனிடத்தில், நாங்கள் பாவம் செய்தோம், எங்களுக்கு மன்னியும் என்று எந்த இடத்திலும் சொல்லவில்லை. அதனால் அவனுடைய வாழ்வில் அதிக வேதனை. தேவனுடைய சமூகத்தைவிட்டு, தேவனுடைய உறவை விட்டு அவன் துரத்தப்பட்டான். **நீங்கள் செய்த தவறை தேவனிடம் அறிக்கை செய்ய வேண்டும். அடுத்து யாருக்கு அறிக்கை செய்ய வேண்டுமோ அவர்களுக்கு அறிக்கையை செய்ய வேண்டும்.** தயவு செய்து நீங்கள் அறிக்கை செய்யாமல் இருந்தால் உங்களுடைய வாழ்வில் பாவத்தினால் வந்த பயம் உங்களைத் தொடர்ந்து வரும். அதனால் உங்களுக்கு மாத்திரமல்ல, பலருக்கும் வேதனையும், துன்பமும், குறைவுகளும், நிந்தனைகளும் ஏற்படுகிற வாய்புகள் உருவாகும்.

## 02. தேவ சித்தத்தைப் புறந்தள்ளி எம் சித்தத்தை நிறைவேற்ற முனையும் போது பயம் வரும்

1சாமுவேல் 15, 16, 17ஆம் அதிகாரங்களை வாசித்துப் பாருங்கள். சவுல் ராஜா தேவன் கூறிய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லை. **சவுல் கீழ்ப்படியாமல் போனதின் நிமித்தம் ஆண்டவர் தாவீதுக்கு விசேஷித்த அபிஷேகத்தைக் கொடுத்தார்.** எங்களுக்கு தேவனுடைய பிள்ளைகள் என்று பெயர். நாங்கள் அந்த பெயருக்கு ஏற்ப வாழ வேண்டும். கிறிஸ்தவர்கள் என்றால் தேவன் கூறியதைச் செய்ய வேண்டும். சவுல் தேவன் கூறியதைச் செய்யாததால் தேவன் தாவீதை இஸ்ரவேல் மேல் ராஜாவாக்கும்படி சித்தம் கொண்டார். நாற்பது நாட்கள் இரவும் பகலும் இஸ்ரவேல் சேனைகளைப் பார்த்து நிந்தித்த கோலியாத்தோடு நேருக்கு நேராக மோதுகிற பரீட்சை ஒன்று தாவீதுக்கு வந்தது. இஸ்ரவேலின் தேவனை நிந்திக்கிற இவனோடு நான் யுத்தத் திற்கு போகிறேன் என்று தாவீது சொன்ன போது சவுல், 'இல்லை நீ சின்ன பிள்ளை' என்று சொன்னான். ஆனால் தாவீது நான் ஒரு நாள் கரடியையும் சிங்கத்தையும் கொன்றேன். ஆகவே இந்தக் கோலியாத்தையும் கொல்வேன் என்று சொல்லி தாவீது யுத்தத்திற்கு போகிறபோது சவுல் அவனை அழைத்து தன்னுடைய தலைச்சீராவையும் ஆடைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு அணிவித்துவிட்டான். ஆனால் அவற்றை அணிந்து கொண்டு நடந்து பார்த்த தாவீதுக்கு அவை பழக்கப்படாததால் கஷ்டமாக இருந்தது. ஆகவே அவற்றைக் கழற்றிவிட்டு சென்றான். அவன்தான் ஆடு மேய்க்கிற போது அதைக் கொல்ல வந்த மற்றைய மிருகங்களை கொன்ற அனுபவங்கள், ஆடு மேய்க்கிற போது அவன் பாடல்களைப் பாடுவான், அப்போது தேவ பிரசன்னத்தை உணருவான், ஆடுகளை மேய்க்கிற போதே அவன் கர்த்தரோடு நல்ல உறவில் வளர்ந்தான்.

**உங்களுடைய வாழ்வில் கர்த்தர் எதை அனுமதித்தாலும் அந்த அனுமதியை தேவனுடைய உறவை முறிப்பதற்கு பயன்படுத்த வேண்டாம். தேவனுடைய உறவில் வளருவதற்கு அதைப்பயன்படுத் துங்கள்.** ஒருவேளை மற்றவர்கள் அதைப்பார்த்து ஏளனம் கூட செய்ய லாம். ஆனால் தாவீது ஏளனம் உள்ள அந்த தொழிலோடும் தேவாதி தேவன் மேல் உள்ள உறவில் வளர்ந்தான். அந்த அனுபவத்தில் ஐந்து கூழாங் கற்களை எடுத்தான், தன்னுடைய கவணை எடுத்தான். வேதம் சொல் கிறது அவன் கற்களை மேய்ப்பனுக் குரிய அடைப்பத்திலே போட்டான். கோலியாத்திற்குகிட்ட தாவீது சென்ற போது கோலியாத் உறுமுகிறான். ஒரு கல்லைக் கவனில் வைத்து சுழற்றி ஒரு அடி அது கோலியாத்தின் நெற்றி யில்படுகிறது. அப்போது கோலியாத் நிலை குலைந்து விழுந்த போது அவன் மேல் ஏறி நின்று அவன் பட்டயத்தை எடுத்து அவன் தலையை வெட்டிப் போடுகிறான். அவனுடைய தலையை எடுத்துக் கொண்டு எருசலேமுக்கு போகிறான். அப்போது சவுல் அப் னேரிடம் கேட்கிறான், இந்த வாலிபன் யார்? என்று. ஆனால் முன்பு சவுல்தான் தனது உடைகளையெல்லாம் தாவீதுக்கு அணிவித்து அனுப்பினான். நான் தேவ சமூகத்தில் இருந்த போது உணர்ந்து கொண்ட காரியம், **தன்னால் செய்ய முடியாததை இவன் செய்து விட்டான் என்பதை சவுலினால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.** அதனால் தான் அவன் அப்னேரிடம் இவன் யார்? என்று கேட்கிறான்.

முன்பு ஈசாயிடம் ஆள் அனுப்பி அவனை இங்கு அனுப்பும்படி சொன்னதே சவுல் தான். ஆனால் இப்போது அப்னேரிடம் தாவீதைக் குறித்து தெரியாதது போன்று இவன் தகப்பன் பெயர் என்னவென்று கேட்கிறான். சவுல் கொன்றது ஆயிரம் தாவீது கொன்றது பதினாயிரம் என்று ஸ்திரீகள் பாடின போது: **1சாமுவேல் 18:8-9 (8.) அந்த வார்த்தை சவுலுக்கு விசனமாயிருந்தது; அவன் மிகுந்த எரிச்சலடைந்து, தாவீதுக்குப் பதினா யிரம், எனக்கோ ஆயிரம் கொடுத்தார் கள்; இன்னும் ராஜாங்கம் மாத்திரம் அவனுக்குக் குறைவாயிருக்கிறது என்று சொல்லி, 9. அந்நாள் முதற் கொண்டு சவுல் தாவீதைக் காய்மகார மாய்ப் பார்த்தான்.** அவன் மனதுக்குள் நினைத்ததை ஆவியானவர் எழுதி வைத்திருக்கிறார். வேத அறிஞர் களின் ஒரு கூற்று **அவனுக்குள் கற்பனைப்பயம் வந்து விட்டது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய கற்பனைப்பயம்; என்னுடைய இடத்தை தாவீது பிடிக்கப் போகிறான் என்பதாக மாறிவிட்டது. வேத அறிஞர்கள் வேதத்தை ஆராய்ந்து கூறிய கருத்து, **தாவீது அவ்வாறு நினைத்ததே கிடையாது. அவனுடைய இருதயத்தில் அவ்வாறு எண்ணம் தோற்றம் பெற்றதே இல்லை. தேவன் தாவீதை நடத்திக் கொண்டு செல்கிறார். ஆனால் அவனுக்குள் அவ்வாறான எண்ணம் ஏற்படவில்லை.**

**கற்பனைப் பயம் நீதிமானை பகைக்கப்பண்ணியது. கற்பனைப் பயம் இஸ்ரவேலுக்கு வர இருந்த நிந்தனையை போக்கப்பண்ணிய மனிதனை துரத்தச் செய்தது. கற்பனைப் பயம் சரியான மனிதன் மீது தவறான கூற்று சொல்லப்பட வைத்தது.** நடைபெற்றதை அல்ல நடைபெறாததை, உண்மையாக நேசித்த தாவீதை சவுல் வெறுப்பதற்கு காரணம் கற்பனைப் பயம். எங்களுடைய கற்பனைப் பயத்தினால் எத்தனை நல்லவர்களை, நீதிமான்களை, பரிசுத்தவான்களை ஏளனமாய் பேசி, ஏளனமாய் மற்றவர்களுக்குள் தூற்றியிருக்கிறோம். எங்களுடைய கற்பனை பயம் தேவனுடைய சித்தத்தை உடைப்பதற்கு எத்தனை தடவைகள் பயன்பட்டிருக்கிறது. ஒரு மனிதனைக் குறித்து உங்களுக்குள் வருகிற கற்பனைப் பயத்தை ஒரு போதும் வளரவிடாதீர்கள். ஆண்டவரே நான் இப்படி யோசிக்கிறேன், இது சரியா என்று ஆண்டவரிடம் கேளுங்கள். ஆண்டவரிடம் கேட்பதற்கு முன் சிலரை அழைத்து இவரைக் குறித்து கவனமாக இருங்கள் என்று சொல்லக் கூடாது.

*ஒருவர் வந்து என்னிடம் சொன்னார், அந்த செய்தியினால் என்னுடைய உள்ளம் உடைந்தது. யாரோ சொல்லியிருக்கிறார்கள் இவரைக் குறித்து கவனமாயிருங்கள் என்று. அப்போது நான் என்ன செய்தேன்? என்ற எண்ணம் எனக்குள் எழுந்தது. தப்பு செய்தேனா? களவு செய்தேனா? தந்திரம் செய்தேனா? அல்லது பாவத்திற்கு ஒத்துப் போனேனா? என்று கேள்விகள் எழுந்தது. ஆனாலும் ஆண்டவரே நீர் பார்த்துக் கொள்ளும் என்று சொன்னேன்.*

தயவு செய்து யோசித்துப் பாருங்கள், எந்த மனிதனை பகைத்திருக்கிறீர்கள்? நீங்கள் பகைத்ததற்குரிய காரியம் உண்மையில் அவர் செய்தாரா? நீங்கள் எந்த ஸ்திரீயைப் பகைத்திருக்கிறீர்கள்? நீங்கள் பகைப்பதற்குரிய நோக்கம் சரியானதா? **தயவு செய்து தேவனுடைய சித்தத்தின்படி தெரிவு செய்யப்பட்டவர்களை, தேவனுடைய ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றவர்களை, தேவனுடைய வழிநடத்தலுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டவர்களை ஒரு போதும் வெட்டிவிடாதீர்கள்.** ஆண்டவர் ஒவ்வொருவருடைய இருதயத்திலும் இந்த பாரத்தை வைத்தருள்வாராக. **உண்மையுள்ளவர்களை நன்றாக நேசியுங்கள். அதனால் உங்களுக்கு நன்மை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டாகும். பாவத்தோடு ஒத்துப் போகாதவனை நேசியுங்கள். ஒரு நாள் தேவனுடைய சாட்சி உங்களுக்கு கிடைக்கும். தேவனுடைய மனிதர்களை மனத்தினாலேயோ அல்லது கரத்தினாலேயோ தாக்க வேண்டாம்.

கற்பனைப் பயம் வருவதற்குரிய முக்கியமான காரியம் என்னவென்றால், அவனுடைய பதவி. தேவனுடைய சித்தத்திற்கு விட்டுக் கொடுக்காத சூழ்நிலை வந்து தேவனுடைய இருதயத்தை சவுல் உடைத்துப் போட்டான்.

## 03. ஒருவித ஆவியின் தாக்கத்திற்கு விட்டுக்கொடுத்தால் பயம் உண்டாகும்.

**11தீமோத்தேயு 1:7 தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.**

தேவனிடமிருந்து பயமுள்ள ஆவி கிடைக்காது. நாம் பயப்படுகிறோம் என்றால் அதற்கு இன்னொரு காரணம் என்னவென்றால், தேவ ஆவியில்லாத இன்னொரு ஆவி எங்களைப் பிடித்திருக்கிறது. சிலரிடம் பேசுகிற போது அந்த அனுபவம் கிடைத்திருக்கும். அவர்களுக்கு பாவம் செய்திருக்கிறோம் என்ற அறிவு கிடையாது. ஆனால் என்னை அறியாத பயம் ஒன்று என்னை ஆட்கொண்டிருக்கிறது, என்னை அது அலைக்கழிக்கிறது, ஏன் இப்படி ஒரு சூழ்நிலை வந்திருக்கிறது என்று சொல்வார்கள்.

*எனக்கு தெரிந்த சகோதரன் ஒருவன் நன்றாக இருந்தவர், திடீரென்று தனக்கு பயமாக இருக்கிறது என்று சொன்னார். அவர் தன்னுடைய வேலையில் பலமடங்கு வேகம் காண்பிப்பார். ஆவியின் தாக்கம் இருப்பதால் வேலைகளை அவ்வாறு செய்வார். பிற்பாடு பார்த்தால் அவருக்கு ஜெபித்த போது அசுத்த ஆவி அவரை விட்டு அகன்றுபோனது.*

நாங்கள் நன்றாக வேலைகளைச் செய்யலாம், நல்ல உத்தியோகத்தில் இருக்க முடியும், நல்ல பொறுப்புக்களை வகிக்கலாம் ஆனால் எங்களுடைய வாழ்க்கையில் அசுத்த ஆவியின் தாக்கம் இருக்குமாயிருந்தால் எங்களுடைய செயற்பாடுகள், தீர்மானங்கள், முடிவுகள் கூட அந்த பயத்தின் அடிப்படையில்தான் நடந்து கொண்டிருக்கும். பயத்தின் அடிப்படையில் எத்தனை தீர்மானங்களை எடுத்திருப்பீர்கள்? எத்தனை காரியங்களை செயற்படுத்தியிருப்பீர்கள்.

**உங்களை அறியாமல் பயம் வருகிறதா? சிந்தித்துப்பாருங்கள். எந்த தாக்கத்திற்கு உங்களைவிட்டுக் கொடுத்தீர்கள்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சகோதரன் விக்கிரகங்கள் உள்ள இடத்திற்கு சென்றிருந்தார். அவர்கள் கொடுத்த உணவைச் சாப்பிட்டிருக்கிறார். அதை சாப்பிட்ட பிற்பாடு சில நாட்களின் பின் என்னை அறியாமலே எனக்குள் ஒரு பயம் காணப்படுகிறது என்று சொன்னார்.

உங்களுடைய பிள்ளைகளை கவனமாக வளர்த்துக் கொள்ளுங்கள். எங்கே சென்று, எதை வாங்கி சாப்பிடுகிறார்கள் என்பதைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். சிலவேளை வெறுங்கையாய் சென்று அசுத்த ஆவி பிடிக்கப்பட்டவர்களாய் திரும்பி வருவார்கள். உலகத்தோடு போடும் ஒத்த வேஷமான வாழ்வினால் கிறிஸ்தவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இது கூட தேவனுக்கு விரோதமான செயல். இது கூட புரிந்து கொள்ள முடியாத ஓர் தாக்கம் தான். எந்த கட்டுக்களில் இருக்கிறோமோ அவற்றில் இருந்து வெளியே வர வேண்டும்.

## பயப்படுவதால் வரும் பலன்

**வெளிப்படுத்தல் 21:8 பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்.**

பயத்தை உடையவர்களுக்கும் நித்திய நரக வாழ்க்கை பலனாக கிடைக்கும். எனவே இப்படியான நிலையோடிருந்தால் அனுபவித்தே இருக்க வேண்டும்.

எனவே தேவனிடம் அறிக்கை செய்து ஆண்டவரே பயத்தின் ஆவிகளை என்னைவிட்டு அகற்றிவிடும் என்னை உமக்கு அர்ப்பணிக்கிறேன் என்று அவரிடத்தில் உங்களை ஒப்புக் கொடுங்கள்.

**'தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக'**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொடர்ச்சி...

❒ போதகர் வேதநாயகம் மகாராஜா

# ரோமர் நிரூபம்

## ஓர் சுருக்க விளக்கம்

சத்தியத்தை அநியாயத்தினால் அடக்கி வைத்திருக்கிறார்கள். அதன் நிமித்தம் இவர்களுக்கு நியாயத்தீர்ப்பு.

**ரோமர் 1:18 தேவனுடைய கோபாக்கினை வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது.**

இவ் வசனத்தில்:

1. பாவத்துக்கான பரிசுத்தத்தின் மாறுத்தரம்

2. நீதியான தண்டனையின் விதிமுறை

என்பனவற்றைக் காணமுடியும்.

பாவத்திற்கான பரிசுத்தத்தின் மாறுத்தரம் எனும் போது;

தேவன் பரிசுத்தராக இருக்கின்றார். எனவே அவர் அனைத்துப் பாவங்களையும் எதிர்க்கின்றார். அத்துடன் தேவனுடைய கோபாக்கினை யானது பாவத்துக்கு எதிரான அவருடைய செயலாக காணப்படுகின்றது.

நீதியான தண்டனையின் விதிமுறை என்னும் போது மனிதர்கள் செய்யும் செயல்களுக்குத் தக்கதாக தகுந்த பலனை அடைகின்றனர். அல்லது பாவிகளுக்கு தேவனுடைய நீதியான தண்டனை வழங்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே தேவனுடைய கோபாக்கினையின் தன்மை எப்படியான தெனில் அது நீதியானது.

வசனங்கள் 19, 20இல் தேவனுடைய வெளிப்பாடுகளைக் காணலாம். புறஜாதிகளுக்கும் தேவனுடைய வெளிப்பாடு கொடுக்கப்பட்டுள்ளது.

வெளிப்பாடு இரண்டு வகைப்படும்:

1. பொதுவான வெளிப்பாடு

2. விஷேட வெளிப்பாடு

பொதுவான வெளிப்பாடு

இயற்கை (படைப்புக்கள்) - ரோமர் 1:19-20

மனச்சாட்சி - ரோமர் 2:14-15

இந்தப் பொதுவான வெளிப்பாட்டால் இரட்சிக்கப்பட முடியாது. ஆனால் இவைகள் கிறிஸ்துவை நோக்கி நடக்க மனிதனுக்கு வழிகாட்டும்.

மனுக்குலம் தேவனைப்பற்றி அறிந்து கொள்வதற்கு அல்லது தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதற்கு ஆதாரமாக பொதுவான வெளிப்பாடு இருக்கின்றது. தேவனைப் பார்த்துத் தொட்டுணர முடியாவிட்டாலும் தேவனுடைய மெல்லிய சத்தத்தை மனிதன் தன் மனச்சாட்சிக்கூடாக கேட்டறியலாம். மற்றும் இவ் உலகின் படைப்புக்கூடாக (இயற்கை) தேவனை அறிந்து கொள்ளலாம்.

படைப்புக்களைப் பார்க்கும்போது இவ்வுலகமானது எமக்கும் அப்பாற்பட்ட ஓர் சக்தியானாலே ஆட்கொள்ளப்பட்டிருப்பதை உணரமுடிகிறது. இதனால் நாம் அந்த தேவனை அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். மனிதன் எதைச் செய்ய வேண்டுமென தேவன் விரும்புகிறாரோ, அதாவது அவர் எமது மனச்சாட்சியுடன் பேசி தவறானதில் இருந்து சரியானதைச் செய்ய உதவுகிறார். பொதுவான வெளிப்பாட்டின் அடிப்படையில், அந்தப் படைப்பின் உண்மையான தேவனை நாம் நெருங்கிச் சேர வேண்டும். அவரை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பொதுவான வெளிப்பாட்டை வைத்து விசேட வெளிப்பாட்டைக் காணாதவன் தனக்கென ஒரு தேவனை உருவாக்கினான்.

தொடரும்....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்ததில் சில...

நீங்கள் சந்தித்துக் கொண்டிருக்கும் போராட்டம் மெதுவாக உங்களுடைய விசுவாசத்தை விரக்தியடையச் செய்கிறது. அல்லது நீண்ட காலமாக தொடர்ந்து கொண்டிருக்கிறது என்றால், தேவன் உங்களுடைய வாழ்க்கையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்று விசுவாசியுங்கள். அது இப்பொழுது உருவாக்கத்தில் (செய்து கொண்டு) இருக்கலாம்... ஆனால் அவர் எதை ஆரம்பித்தார் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். தேவனுடைய கரம் உங்கள் மேல் இருக்கிறது என்பதை நீங்கள் உறுதியாக விசுவாசிக்கலாம். அவர் உங்களை ஒரு போதும் கைவிடமாட்டார். நீங்கள் தேவனுடைய பொக்கிஷம், அவர் உங்களில் மகிழ்ச்சியைக் காண்கிறார்! உங்கள் பாதைகளை தேவன் நடத்தட்டும், தோல்வி என்று நீங்கள் நினைத்தது ஒரு வெற்றியாக இருக்கும்! விசுவாசத்துடன் இருங்கள்.

பிரியமானவர்களே, நீங்கள் அனுமதித்தால், அவர் உங்களுக்கு சிறப்பானவைகளைக் காண்பிப்பார் மற்றும் சிறந்த பாதையில் உங்களை வழிநடத்துவார். நீங்கள் சரியான வழியில் செல்ல எதைச் செய்ய வேண்டும் என்பதை அவர் உங்களுக்குக் காண்பிப்பார்.

**பிலிப்பியர் 1:6 உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவார்.**

---

வாழ்க்கையில் எந்த சுவடுகள் ஒரு நல்ல திருப்பத்தைத்தரும் என்று உங்களுக்குத் தெரியாது! எனவே தொடர்ந்து நடந்து செல்லுங்கள்! நீங்கள் குறைவாக எதிர்பார்க்கும் போது மகிழ்ச்சியும், ஆசீர்வாதங்களும் வரும். தேவன் எப்போதும் இருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் அவரை முதலில் வைத்தால் அவர் ஒரு போதும் உங்களைத் தோல்வியைச் சந்திக்கவிடமாட்டார். அவருடைய ஆசீர்வாதம் உங்களைத் தொடர்ந்து வரும். அன்பானவர்களே, தேவனை விசுவாசியுங்கள். உங்களால் சாலையில் சிறிது தூரத்தை மட்டுமே பார்க்க முடியும், ஆனால் ஆண்டவரால் அதிலுள்ள ஒவ்வொரு வளைவுகளையும் பார்க்க முடியும். நம்புங்கள் மற்றும் உங்கள் நம்பிக்கையை அவர் மேல் வையுங்கள்.

**யோசுவா 1:9 பலங்கொண்டு திடமனதாயிருங்கள்; திகையாதீர்கள், கலங்காதீர்கள்.. உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களோடே இருக்கிறார்.**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உன்னையும் ஆசீர்வதிப்பார்...

**வேதப்பகுதி: 1சாமுவேல் 2:7-10**

நித்திஷ் அவனுடைய பெற்றோருடன் ஒரு வசதியான காரில் வந்து இறங்கினான். அதைப் பார்த்த பால்குமார் அவனுடைய தந்தையிடம் "அப்பா கர்த்தர் நித்திஷ்க்கு ரொம்ப வசதியான கார் குடுத்திருக்கிறாரு. பெரிய வீடு கொடுத்தி ருக்கிறாரு. நமக்கு அது போன்று எதுவும் தரவில்லையே" என்றான்.

"பால்குமார் உனக்கு ஒரு விஷயம் சொல்கிறேன்" என்றார் அவனுடைய தந்தை. "நித்திஷின் அப்பா உன்னைப் போல் சிறுவனாயிருக்கும் போது மிகவும் ஏழையாயிருந்தார். சாப்பாடு கூட சரியாக கிடைக்காது. ஆனாலும் கர்த்தருக்குப் பிரியமாக வாழ்ந்தார். வீடுகளிலும், கடைகளிலும் வேலை செய்து கொண்டே படித்தார். அதனால் தான் இன்று கர்த்தர் அவரை வசதியாக வைத்திருக்கி-றார். நீயும் பக்தியாய் வாழ்ந்தால் கர்த்தர் உனக்கும் நல்ல வசதியைத் தருவார். பால்குமாருக்கு பக்தியாய் வாழவேண்டும் என்ற ஆசை வந்தது.

**சிந்தனைக்கு:-**

**நாம் பிறருடைய வசதிகளைக் கண்டு வருத்தப்படக்கூடாது. நாம் கர்த்தருக்கு பிரியமாக வாழ்ந்தால் கர்த்தர் நம்மையும் வசதியாக்குவார்.**

நன்றி: 'சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்' – ஜனவரி 12

# அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை. காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / ZION CHURCH என எழுதப்பட வேண்டும்)

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

### Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 660.00 |
| இந்தியா (India) | 1200.00 |
| கனடா. அமெரிக்கா (Canada & USA) | 1400.00 |
| சிங்கப்பூர். மலேசியா (Singapore & Malaysia) | 1200.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 1500.00 |
| ஜேர்மனி. இங்கிலாந்து. இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 1500.00 |

*சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.*

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:..........................................

முகவரி:..........................................

..........................................

..........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவன் தந்த வைரங்கள்...!

பெரிய ஆபத்தின் பாதைகள் கூட
உன்னைக் குறித்து தேவனுடைய
சித்தத்தில் இருக்கலாம். தன்
சித்தத்தை நிறைவேற்ற தேவன்
கடினமான ஆயத்தங்களைச்
செய்வார்.

அழைக்கப்பட்ட ஊழியன் மிகவும்
வேதனை தரக்கூடிய வாழ்வின்
பக்கங்களையும் சிறப்பாய் நிறைவு
செய்ய வேண்டும். அப்பொழுது தான்
தன் அழைப்பை பூரணப்படுத்த முடியும்.

பெருமழையின் ஆசீர்வாதங்களுக்கான
சிறு அடையாளங்கள் தென்படும்வரை
வருந்தி ஜெபிப்பதற்கான
முழங்கால்களை உருவாக்கிக்
கொள்ளுங்கள்.

நாம் தேவனை முழுமனதுடன் தேடும்போது
தேவனும் நம்முடன் இருப்பார்.
அன்றன்றுள்ள தேவைகளும் சந்திக்கப்படும்.
பணத்தைத் தேட தொடங்கிவிட்டால்
தேவைகளுக்கு மேலான பணம் இருக்கும்;
தேவன் நம்முடன் இருக்கமாட்டார்.

-VM-

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org